23rd March 1963]

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே அதைப் பரிசீலனை செய்து தான் ஒரு கமிட்டியை நியமித்திருந்தோம். இதனால் அதிக பலன் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. அதோடு ஒவ்வொரு ஜில்லாவிலும் டெவலப்மெண்ட் கவுன்ஸில் இருக்கிறது. நாங்களும் அடிக்கடி இதைப்பற்றிக் கூடிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகையால், வேறொரு கமிட்டிக்கு அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, நெல் விலையைக் கொஞ்சமாவது உயர்த்துவதற்கு சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அறுவடைக் காலத்தில் கொஞ்சம் விலை குறைந்திருக்கும். ஆனால், போகப் போக விலை ஏறிக் கொண்டேயிருக்கும்.

*Cooum River*

* 357 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the present stage of the proposal to deepen the Cooum River and make it useful for transport?

The Hon. Sri V. RAMAIAH : The Government have decided to carry out the Cooum Improvement Scheme in a phased programme of about 5 years. The scheme can be put into execution only if a dredger is secured. The Government of India have been addressed to release foreign exchange required for the purchase of dredger and their reply is awaited.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இந்தத் திட்டத்தை அமுல் படுத்தும்போது திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையார் ஆகிய பகுதிகளை கிண்டி புகைவண்டி நிலையம் வரையில் இணைக்கும்படியாக ஒரு வாய்க்கால் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு புதுக்கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இதைத் தனியாக எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இப்போது போக்குவரத்துப் பிரச்னை வளருகிற சென்னை நகரத்தில் ஜன நெருக்கடியின் காரணமாக மிக அவசியமாக இருப்பதனால் இந்தக் கருவிகளை விரைவாகப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** ரொம்பத் தீவிரமாக நானே முயற்சி எடுத்திருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடம் நேரில் பேசி அதற்கான பணத்தினையும் பெறவேண்டுமென்று எண்ணி

னேன். ஆனல், இப்போது தேசத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக இதை வலியுறுத்துவது நியாயமாக இருக்காது என்ற காரணத்திற்காக ஒத்திப் போட்டிருக்கிறோம். விரைவிலே இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்தால்தான் நன்மை ஏற்படும் என்ற காரணத்தினல் சந்தர்ப்பம் ஏற்படும்போது அரசாங்கம் முயற்சிகள் செய்யும் எனச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு நல்ல திட்டமாக இருப்பதாலும், மேலும் இப்போது இந்திய நாட்டிலிருந்து 600 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுவதாலும், அதிலும் 200 கோடி ரூபாய் அளவுக்கு நம் மாகாணத்திலிருந்து ஏற்றுமதியாவதாலும், இந்தக் காரணத்தை எடுத்துச் சொல்லி அத்திட்டத்திற்குப் பணம் பெற சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அவர்கள் 600 கோடி, 200 கோடி என்று சொல்லுகிருர்கள். அது எனக்கு ஒன்றும் புரியவில்லை. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் இது ஒரு முக்கியமான திட்டம் என எண்ணுகிறேன். இது போக்குவரத்துக்கு பயன்படுவதோடல்லாமல், அதனல் ஏற்படக்கூடிய கெட்ட நாற்றம் இல்லாமல் இருக்கும். இதைப்பற்றி நிபுணர்கள் ஆராய்ந்து ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிருர்கள்.

இது போக்குவரத்துக்கு எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை அறிவதற்கு ஸ்டேட் அட்வைசரி கமிட்டியினர் பரிசீலித்து அவர்களும் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிருர்கள். இது போக்குவரத்துக்கு எப்படிப் பயன்படும் என்று ஆராய்ச்சி செய்யப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையார் வழியாக கிண்டி புகை வண்டி நிலையம் வரையில் இணைக்கும்படியான ஒரு கனலை அமைக்கலாம் என்று. அதற்கு 'ராமையா கனல்' என்று பெயர் இடலாம்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் முதலில் போட்ட கேள்வியையே திரும்பவும் போட்டுக்கொண்டிருக்கிருர். அதைத் தனியாக எழுதிக் கொடுத்தால் பரிசீலனை செய்வதாக கனம் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னர்கள்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினருக்குப் பதில் அளிக்க நான் அனுமதி கோருகிறேன். முன்பு சொன்னபோது அது எனக்குப் புரியவில்லை. இப்போது நன்ருகப் புரிகிறது. இப்போது இருக்கக்கூடிய கால்வாயை அபிவிருத்தி செய்வது பற்றித்தான் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. புதிதாகக் கால்வாயோ, கனலோ வெட்டுவதற்குத் திட்டம் ஒன்றும் இல்லை.